சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 11.03.2026
பி.வா.சா.1 – ஆல்வின் அமலன் S/o இருதயராஜ்
C.O.S. No. 2/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

27.05.2015தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணம் வாயிலாக என் தாயார் மேரிக்கு வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னர் என் தாயார் மேரி, வாதி நிறுவனத்திற்கு எழுதி கொடுத்துள்ள கடனீட்டு பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை, பார்த்ததில்லை. வா.சா.ஆ.3 ஆவணம் தான் என் தாயார் வாதி நிதி நிறுவனத்திற்கு கொடுத்துள்ள மனு என்று சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு குறிப்பிடுகிறார். நான் கடனீட்டு பத்திரத்தை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்ததில்லை. என் குடும்ப அவசர தேவைக்காகவும், தொழில் அபிவிருத்திக்காகவும், கடன் பெற்றதாக வா.சா.ஆ.4 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதில் உள்ள கையெழுத்து என் தாயாருடையது கிடையாது. அவர் SS மேரி என்று தான் கையெழுத்திடுவார். Iமேரி என்று இடமாட்டார். 2021ம் ஆண்டு தான் எனக்கு வாதி நிறுவனம் என் தாயாரிடம் பணம் கொடுத்ததாக சொல்லப்படும விபரமே தெரியவந்தது. என் தகப்பனாரிடம் தனியாக கூப்பிட்டு பேசி கொண்டிருந்தார்கள், அப்போது தான் நான் வாதி நிறுவனத்தினடம் கேட்டேன். எனது எதிர்வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் வாதி நிதிநிறுவனம் என் தாயாரை ஏமாற்றி மோசடியாக ஆவணம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.4 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிந்தவுடன் சட்டபடியான நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தின் வாயிலாக தான் 5 லட்சம்

ரூபாயை என் தாயார் பெற்றிருக்கிறார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் பி.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி வாதிக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எங்களுக்குள்ளாக ஏற்படுத்தி கொண்ட ஆவணம் என்பதாலும், அது வாதியின் அறிவிற்கு செல்லவில்லை என்ற காரணத்தினாலும் மேற்படி விடுதலை பத்திரம் என்று சொல்லக்கூடிய பி.சா.ஆ.1 ஆவணம் செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் வாயிலாக வழக்கு சொத்து என் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்பதால் வாரிசுரிமை அடிப்படையில் பெற்றுகொள்வதில் என் தகப்பனார், என் தம்பி கான்ஸ்டன்டைன், என் அண்ணன் பிரான்சிஸ்பிரகாஷ் மற்றும் எனக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வாரிசுரிமை அடிப்படையில் சொத்தில் பாகம் இருப்பதால் என் தாயார் வைத்துள்ள ஈடுகடன் பத்திரத்தை பொறுத்தவரை அதை அடைக்க எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் பங்கு இருக்கிறது என்றால் சரியல்ல. வாதி கோரியிருக்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும், வழக்கை செலவு தொகையுடன் வாதிக்கு சாதகமாக அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.11 19:13:11 +0530

Sub Judge

Melur